Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 22

# சங்க இலக்கியத்தில் நகரம் பற்றிய செய்திகள் (ஆற்றுப்படை இலக்கியங்களை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு)

***சிவராசா ஓசாநிதி***
*ஆராய்ச்சி உதவியாளர், RIC AHEAD Project,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
*மின்னஞ்சல்: oshasivara12@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

சங்ககாலம் தொடர்பாக கீழடி அகழாய்வுகள் தற்பொழுது முதன்மை பெற்று வந்துள்ளன. அந்தவகையில் கீழடி அகழாய்வுகள் தமிழகத்தில் நகரங்கள் இருந்தன என்பதை உறுதி செய்துள்ளது. இதனை பின்வரும் கூற்றுக்கள் உறுதி செய்துள்ளன. 'தமிழகத்தில் 2m ஆழத்தில் கிடைத்த பொருட்களின் கார்பன் கணிப்பு அதன் காலத்தை கி.மு 3ம் நூற்றாண்டு என உறுதிசெய்துள்ளன'(2017, Amaranath Ramakrisna). அதேபோன்று அ. இராமசாமி 'தொன்மைத் தழிழர் வரலாறு' என்னும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார். தமிழகத்தில் 6.5 m ஆழம் வரை அகழாய்வு செய்ய வேண்டியயுள்ளதால் அதன் காலம் கி.மு 1500 வரை போகும் எனக் கருதப்படுகின்றது. தமிழகத்தில் மூன்று இடங்களில் செம்பு உணர் கொம்புடைய வாள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை கி.மு 2000 முதல் 3000 வரை பழமை வாய்ந்தவை' (இராமசாமி,அ., 2013 பக்: 63-64). இதனடிப்படையில் தமிழகத்தில் இடம்பெற்றுள்ள கீழடி அகழாய்வுகளின் ஊடாக நகரம் இருந்தன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் இவ் நகரம் பற்றிய செய்திகள், தலைநகரம் பற்றிய செய்திகள்

மற்றும், துறைமுக நகரங்கள் பற்றிய செய்திகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. அத்தோடு இவ்வாய்வானது பொருநராற்றுப்படை(ஆய்வின சுருக்கம் கருதி) தவிர்ந்த ஏனைய திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய மூன்று ஆற்றுப்படை இவ்விலக்கியங்களின் செய்யுட்கள் மற்றும் உரைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கியும் பகுப்பாய்வு நோக்கிலும் அமைந்துள்ளது.

## ஆய்வின் நோக்கம்

சங்ககாலத் தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்களைப் புலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். அந்தவகையில் மன்னர்கள் வாழ்ந்த நகரங்கள், தலைநகரங்கள், துறைமுக நகரங்கள், அவற்றின் அமைப்பு, அவற்றின் செல்வம் மற்றும் அவற்றின் தற்கால நிலைமைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## ஆய்வின் எல்லை

ஆய்வின் முழுமை கருதி சங்ககால பத்துப்பாட்டு இலக்கியத்தில் பொருநராற்றுப்படை தவிர்ந்த திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, என்னும் ஆற்றுப்படை இலக்கியங்கள் எல்லைகளாக அமைந்துள்ளன.

## முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள்

முதலாம் நிலைத் தரவுகளாக சங்ககால பத்துப்பாட்டு இலக்கியத்தில் பொருநராற்றுப்படை தவிர்ந்த திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்னும் ஆற்றுப்படை இலக்கியங்களும் இராண்டாம் நிலைத் தரவுகளாகப் சங்க இலக்கியம் குறித்து எழுந்துள்ள ஆய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பனவும் அமைந்துள்ளன.

## ஆய்வின் அணுகுமுறை

சங்ககால பத்துப்பாட்டு இலக்கியத்தில் பொருநராற்றுப்படை தவிர்ந்த திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, என்னும் ஆற்றுப்படை இலக்கியங்களின் செய்யுட்களையும் உரைகளையும் பகுத்தாராய்ந்தும் அவற்றை விளக்கியும் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது.

## இலக்கிய மீளாய்வு

கீழடியின் நான்காம் கட்ட அறிக்கைக்கு முன் கோவை NGP சல்லூரியில் 'உலகத் தமிழ் பண்பாட்டு மையம் நடாத்திய கருத்தரங்கில்(2019) கணியன்பாலன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 'சங்ககாலமும் நகர அரசுகளும்' என்னும் கட்டுரையில் சங்ககால கீழடி அகழாய்வு பற்றிய கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

இராமாணிக்கனாரின் 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்னும் நூலில் நகரங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. சாமி சிதம்பரனாரின் 'பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை'(2008) என்னும் நூலில் பட்டினப்பாலைச் செய்யுட்களை ஆராய்ந்து அவற்றில் மன்னன் மற்றும் நகரங்கள் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

## ஆய்வின் உள்ளடக்கம்

## நகரங்கள்

சங்ககால மக்கள் தங்களின் தொழிலின் நிமித்தம் மருதநிலத்தை அண்டியே வாழ்ந்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே கிராமங்களும், கிராமங்கள் நாளடைவில் பேரூர்களாகவும் பேரூர்கள் நாளடைவில் நகரங்களாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் நகர் என்ற சொல் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் இடம்பெற்றுள்ளன. நகரம் என்னும் சொல்லானது மாளிகை, வீடு, மனை, கடவுளின் கோயில், இல்லம், அரண்மனை ஆகியவற்றை அதிகமாகவும் மக்கள் வாழும் பகுதியைக் குறைவாகவும் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதற்கு மாறாகப் பேரூர், மூதூர், தொல்பதி, பட்டினம் முதலான சொற்கள் நகரம் என்னும் பொருளைக் குறித்து நிற்கின்றன. அந்தவகையில் பொருநராற்றுப்படை தவிர்ந்த ஏனைய ஆற்றுப்படை இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நகரம் பற்றிய செய்திகளை நோக்குவோம்.

## அலைவாய்

அலைவாய் என்னும் நகரம் திருச்சீலைவாய், செந்தில், திருச்செந்தில் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளன. தற்பொழுது திருச்செந்தூர் என அழைக்கப்படுகிறது. இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் கடற்கரை ஓரமாக இந்நகரம் அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களில் அலைவாய் முருகனுக்குரிய இடங்களில் ஒன்றாகப் பாடப்பட்டுள்ளது. இராசமாணிக்கனார் அலைவாய் என்ற பெயர் வரக்காரணம் 'அலையிடத்து அமைந்துள்ள கோவிலாதலினால் அலைவாய் எனப்பட்டது. பின்னர் இப்பெயர் அக்கோவில் உள்ள ஊருக்குப் பெயராயிற்று

## எனலாம்'(இராசமாணிக்கனார், மா, சங்க இலக்கிய வரலாறு பக்: 313) என்றார்.

அலைவாயிடத்தே வான்வழியே சென்று முருகன் எழுந்தருளுவதாகவும் அச்சமயத்தில் தேவர்கள் துந்துபி முழக்குவதாகவும் அத்தோடு கொம்பு, சங்கு, முரசு போன்றவற்றையும் முழக்குவதாகவும் மயிலானது முருகப்பெருமானின் வெற்றிக் கொடியிலிருந்து அகவுவதாகவும் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. இதனை பின்வரும் திருமுருகாற்றுப்படைச் செய்யுட்களின் வாயிலாக வெளிப்படுத்தலாம்.

'அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
ஊரந்தலைக் கொண்ட உருமிடி முரசொடு அகவ
விசும்பாறாக விரிசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே' (திரு:119- 125)

# ஆமூர்

ஆமூர் நகரம் ஒய்மா நாட்டில் அமைந்துள்ளது. இந்நகரம் மருத நிலங்களை அதிகம் கொண்டுள்ளதால் சான்றோர் உறையும் அரிய காவலுடையதாக விளங்குகின்றது. அந்நகரத்தைச் சுற்றி அகழி காணப்பட்டுள்ளதோடு அந்தணர்கள் வசித்து வந்துள்ளனர். இங்கு உழவனின் தங்கை, வருகின்ற விருந்தினருக்கு முறைப்படி வரவேற்பளித்து உபசரித்துள்ளார். அதாவது இரும்புப் பூண் போட்ட உலக்கைகொண்டு குற்றிய அரிசியைக்கொண்டு சமைத்த சோற்றைத் திரளை நண்டின் கலவையுடன் பரிமாறிப் பசியாற்றியுள்ளார். இதனை,

'மருதஞ் சான்ற மருதத் தண்பனை
அந்தண ரருகா வருங்டி வியனகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூரெய்தின்
......................................
இருங்காழ் உலக்கை இரும்புமுகந் தேய்த்த
அவைப்புமாண் அரிசி அமலைவெண்சோறு

## கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்'(சிறு: 186-195)

என நல்லூர் நத்ததத்தனார் சிறுபாணாற்றுப்படையில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆமூர் எனும் பெயர் கொண்ட ஊர் திண்டிவனம் மாவட்டத்தில் இல்லை. எனினும் வேலூருக்கு வடமேற்கில் ஏறத்தாழ நான்கரைக்கல் தொலைவில் 'கொண்டமூர்' என்றும் இதற்கு வடமேற்கில் மூன்றரைக்கல் தொலைவில் 'சிற்றமூர்' என்றும் அதற்கும் வடமேற்கில் மூன்றுகல் தொலைவில் 'நல்லாமூர்' என்றும் மூன்று ஊர்கள் அமைந்துள்ளன. இந்த நல்லாமூர் கிடங்கிலுக்கு அருகில் உள்ளதாலும் சிறுபாணன் கூற்றுப்படி மருத வளம் காணப்படுவதாலும் நல்லாமூரே சங்ககால ஆமூராய் இருந்திருக்கலாம்' (இராச மாணிக்கனார்,மா., சங்க இலக்கிய வரலாறு, பக்:346-347) என இராசமாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

# ஆவிநன்குடி

இன்றைய பழனி மலையின் அடிவாரப் பகுதியே அக்கால ஆவிநன்குடி ஆகும். பழனி மலை 'பொதினி' என சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. இதனை ஆவியர் குடியினர் ஆண்டு வந்தனர். இதனை 'ஆவிக் கோமானின் குடியினர் வாழ்ந்த ஊர் ஆவிகுடி என வழங்கப்பெற்று நாளடைவில் ஆவிநன்குடி என ஆகியிருக்க வேண்டும்' என்று ஆர் ஆளவந்தார் கூறுகிறார். போதினி மலையையும் பேகனையும் பாடிய புலவர்கள் ஆவிநன்குடியைக் குறிப்பிடாததால் இந்நகரம் பிற்காலத்தில் புகழ்பெற்றதாக விளங்கியிருக்க வேண்டும். இன்றுள்ள பழனி என்னும் தலத்தில் மலையடிவாரத்தில் உள்ள கோயில் ஆவிநன்குடி எனும் ஊரைச் சார்ந்த பழயை கோயில் எனவும் மலைமீதுள்ள கோயில் பிற்காலத்திற்குரியது என பழனித்தல வரலாறு கூறுகிறது. இந்நகரம் 'சித்தன் வாழ்வு' என்ற பெயரையும் கொண்டிருந்தது.

திருஆவிநன்குடியில் உறையும் முருகனைத் தரிசிக்க முனிவர்கள் வந்ததாகவும் அவர்கள் மரவுரி தரித்தும் வலம்புரிச் சங்கின் வடிவில் நரைமுடியையும் உடையவராய் விளங்கியதாகவும், காமமும், சினமும் நீங்கியவர்களாகவும் காணப்பட்டுள்ளார்கள். தூய ஆடையை அணிந்த கந்தருவர் இனிய பாக்களைப் பாடுவதாகவும், குற்றமற்ற கந்தர்வ மகளிர் மட்டும்லாது கருடக் கொடியை உடைய திருமாலும், காளைக் கொடியைக்கொண்ட, உமையை ஒருபாகத்தே பெற்ற சிவனும் ஆயிரம் கண்களை உடைய பல வேள்விகள் செய்த ஐராவதவாகனான இந்திரன் ஆகியோரும் திருஆவிநன்குடி சென்று முருகனைத் தரிசித்தாகவும் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

'சீரைதைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானவரை முடியினர்

மாசற விமைக்கு முருவினர் மானி...'(திரு:126-173)

அத்தோடு மேற்கூறிய அனைவரும் வந்து காணும்படி குற்றமற்ற தெய்வயானையுடன் முருகப்பெருமான் எழுந்தருளியிருந்தார் என்பதை பின்வரும் திருமுருகாற்றுப்படை அடிகள் எடுத்தியம்புகின்றன.

'தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவிநன்குடி அசைதலும் உரியன்' (திரு: 175-176)

# பரங்குன்றம்

பரங்குன்றம் முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. மதுரைக்கும் பரங்குன்றத்திற்கும் இடையில் அகன்ற வயல்கள்

அமைந்திருந்ததாகவும் இவ்வயல்களிலுள்ள தாமரை மலர்களில் வண்டுகள் இரவில் துயில் கொள்வதாகவும் வைகறைப் பொழுதில் தேன் மணக்கும் நெய்தல் மலர்களிலுள்ள தேனை நுகருவதாகவும் ஞாயிறு தோன்றியவுடன் பரங்குன்றத்தில் உள்ள சுனையில் பூத்த மலர்களில் சென்று ஆரவாரித்த வண்ணம் இருப்பதாகவும் திருமுருகாற்றுப்படையில் பரங்குன்றம் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

'கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்த துறைதலும் உரியன'(திரு: 71-77)
மாவிலங்கை

சங்ககாலத்து மாவிலங்கை புகழ்பெற்ற பண்டைய இலங்கையின் பெயரைக் கொண்டது. இது ஒய்மாநாட்டின் உள்நாட்டு நகரமாக விளங்கியது. தற்பொழுது திண்டிவனத்திற்கு வடக்கில் ஏறத்தாழ ஏழு கல் தொலைவில் தௌ;ளாறு செல்லும் நெடுஞ்சாலையில் மேல்மாவிலங்கை, கீழ்மாவிலங்கை என்னும் சிற்றூர்கள் அமைந்துள்ளன. இவையே சங்ககாலத்து மாவிலங்கையாக விளங்கின. இந்நகரத்தைத் தொலமி 'மெலங்கே' எனக் கூறுகிறார். 'கடற்கரை ஓரமாக நீரும் நிலமுமாக அமைந்த இடம் கலக்குமிடத்தில் கிளைகளாகப் பிரிந்து இடையிடையே நீரும் திடலுமாக அமைவதுண்டு. இவ்வாறு நீரும் திடலுமாக அமைந்திருந்த பட்டினம் மாவிலங்கை என்னும் பெயரைப் பெற்றிருந்தது' (மயிலை சீனி வேங்கட சாமி, சிறுபாணன் சென்ற வழி) என மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுகிறார்.

மாவிலங்கையைச் சூழ்ந்து நீர் நிறைந்திருந்ததாகவும் இந்நீர்த்துறையில் மகளிர் நீராடுவதாகவும் அந்நீரில் சுரபுன்னை மலர்களும் அகில் கட்டைகளும், சந்தனக் கட்டைகளும் மிதப்பதாகவும் இதனை ஓவியர் குடியினர் ஆண்டு வந்ததாகவும் இவர்களில் கொடையில் சிறந்தவனாக நல்லியங்கோடன் விளங்கியதாகவும் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. அத்தோடு புகழ்பெற்ற பழைய இலங்கையின் பெயரைக்கொண்டு விளங்கியதை,

'நறுவீநாகமும் அகிலும் ஆரமும்
துறையொடு மகளிர்க்குத் தோட்புனை யாகிய
பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்
தொன்மா இலங்கை கருவொடு பெயரிய
நன்மா இலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்'(சிறுபாண்: 166-172)

இவ்வாறு நகரங்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருக்கும் அதேவேளை தலைநகரங்கள் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

## தலைநகரம்

அரசனின் தலைநகரம் அரசிருக்கை, கோநகர், படைவீடு என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டது. இவற்றுள் அரசிருக்கை என்பது அரசன் நிலையாக வாழும் நகரையே குறிக்கும். கோநகர் அரச குடும்பத்தினர் இருந்து ஆளும் நகரையும் படைவீடு என்பது படை நிறுத்தப்பெற்று அரசன் நடுகாவல் சுற்றுப் போக்கில் தங்கக்கூடிய நகரையும் குறிப்பதுண்டு. தலைநகரங்கள் அவற்றின் பெருமை பற்றிப் பேரூர் அல்லது மாகநர் என்னும் ஆரவாரம் பற்றிக் கல்லென் மூதூர் என்றும் பழைமையான வெற்றியுடைமை பற்றிப் பழவிறன் மூதூர் என்றும் காவல் மிகுதி பற்றிக் கடிநகர் என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

'கோகநரங்கள் சுற்றிலும் கோட்டைச் சுவர்கள் கொண்டன. புறநகரில் படைகள் தங்கும் இடங்கள் கொண்டன. வானுயர் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் கொண்டன. நால்வகைப் படை இருக்கைகள் கொண்டன. பலவகையான கோயில்களும் அம்பலங்களும் அறக்கோட்டங்களும் கொண்டது. அரசனின் அரண்மனையும் தோட்டமும் பூங்காக்களும் இளமரக்காவும் உடையது.' (பார்த்தசாரதி,நா., மேலது, ப: 152) என்பர் நா. பார்த்தசாரதி. தலைநகரங்களை வடமொழியில் 'இராஜதானி' என வழங்குவர். இத்தன்மைத்தான நகரங்கள் பல சேரிகளாகப் பாகுபட்டிருந்தன. ஒவ்வொரு குலத்தவரும் அல்லது வகுப்பாரும் சேர்ந்து வாழும் தெரு அல்லது தெருத்தொகுதி சேரி எனப்பட்டது. இதனைத் தொல்காப்பியர்,

ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்' (தொல்: பொருள்: 983)எனக் குறிப்பிடுகிறார்.

கடல்கோள்களாலும் பகைவராலும் தலைநகரங்களுக்கு அழிவு நேர்ந்தபோதும் பழந்தலைநகர் வசதியற்றவிடத்தும் பிறிதொரு நகரைத் தலைநகராக்கிக் கொள்வதும் புதிய தலைநகரை அமைத்துக் கொள்வதும் பண்டைய தமிழரசர் வழக்கமாக இருந்தது. இவ்வகையில் வெள;வேறு காலங்களில் வெள;வேறு தலைநகரங்கள் அமைவதுண்டு. பாண்டியரின் தலைநகரம்

தென்மதுரை, கபாடபுரமாக இருந்து கடல்கோளால் அழிவுற்றுப் பின் வடமதுரை தலைநகரமாக அமைந்தது என்பர். சோழர்களின் தலைநகரம் உறந்தை புகழ்பெற்று விளங்கியது. பின் எக்காரணத்தாலோ புகார் தலைநகராக்கப்பட்டது. அவ்வாறு விளங்கிய சங்ககாலத் தலைநரங்களை நோக்குவோம்.

## காஞ்சி

காஞ்சி தொண்டை நாட்டின் தலைநகரமாக விளங்கியது. சங்க காலத்தே கச்சி, காஞ்சி என அழைக்கப்பட்டு பிற்காலத்தில் காஞ்சிபுரம் என அழைக்கப்பட்டது. தற்போது தமிழகத்தின் மாவட்டங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இன்றைய காஞ்சிபுர நகரின் கிழக்கிலுள்ள நிலப்பரப்பே சங்ககாலக் காஞ்சி என்ற கருத்தும் நிலவுகிறது. 'கச்சி என்ற பெயர் (சீந்தில் என்பது பொருள்) தாவரப் பெயரே. காஞ்சி என்ற பிற்காலப் பெயரும் தாவரப் பெயர் அடிப்படையில் அமைந்ததே. எனவே கச்சி, காஞ்சி என்ற இரண்டு பெயருமே தாவரப் பெயர் அடிப்படையில் அமைந்தன எனக் கூறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் காஞ்சி என்ற ஊர் மரப்பெயரால் பெயர் பெற்றது' (ஆளவந்தார், ஆர்., இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், பக்: 95-96) என்றும் ஆர். ஆளவந்தார் கூறுகிறார்.

காஞ்சி மாநகரத்தின் பழைய வடிவமானது இருபுறமும் அமைந்த ஏரிகள் இருபுறத் தோகைகளாகவும் கோட்டை மதில் வயிறாகவும் பீலி கடிகையாகவும் நீர் வண்ணன் அத்தியூரை வாயாகவும் உடைய காஞ்சி அழகிய மயில் போன்ற தோற்றமுடையதாகக் காணப்பட்டுள்ளது. இதனை,

'ஏரி இரண்டும் சிறகா எயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவாச் அணிமயிலே போன்றதே
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு'

என்னும் பழந்தமிழ்ப் பாடல் வாயிலாக அறியலாம்.

தொண்டைமான் இளந்திரையன் ஆட்சி செய்த காஞ்சி நகரம் பல வளங்களையும் பெற்றிருந்தது. அங்கு யானைக்குக் கொடுப்பதற்கு நெய் ஊற்றி மிதித்துப் பெரிய பெரிய உருண்டையான கவளங்களாக்கி வைத்திருந்தனர். பாகர், இதனைச் சூலுடைய மந்திகள் யானைப்பாகர் சோர்வான நேரத்தில் வந்து கவர்ந்து சென்று உண்ணும். இதுபோன்ற சோலைகள் பலவற்றைக் கொண்டதாகக் காஞ்சி விளங்கியுள்ளது. இங்கு அடிக்கடி தேர்கள் செல்வதால் சாலைகள் குழிந்த பாதையுடன் காணப்பட்டன இதனை பெரும்பாணாற்றுப்படையின் பின்வரும் பாடல் வரிகள் எடுத்தியம்பியுள்ளன.

இங்கு பொருட்களை வழங்குவோரும் அதனைப் பெற்றுக்கொள்வோரும் மிகுதியாக இருந்ததால் நடந்து செல்லவும் தடை ஏற்படுமளவிற்குச் சாலைகளில் நெரிசல் காணப்பட்டுள்ளதாகவும் பெரும்பாணாற்றுப்படையின் வாயிலாக அறிய முடிகின்றது.

காஞ்சி மாநகரத்தின் நுழைவாயில் பிறர் அடைய முடியாத உயர்ந்த மதிலுடனும் காவற்காடு சூழ்ந்தும் இருந்துள்ளதோடு செங்கல்லாலான உயர்ந்த புறப்படைவீடும்; சுற்றி மதிலும் இருந்துள்ளன. இது தாமரையின் நடுவில் உள்ள பொகுட்டைப் போலக் காட்சியளித்துள்ளது. இந்நகரம் பழமையான ஊர்களைத் தன்னகத்தே கொண்டு வெற்றியுடைய மூதூராகவும் விளங்கியதை,

'பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்
இழுமென் புள்ளின் ஈண்டு கிளைத்தொழுதிக்
கொழுமன் சினைய கோளி யுள்ளும்
பழம்மீக் கூறும் பலாஅப் போல
புலவுக்கடல் உடுத்த வானம் சூடிய
மலர்தலை உலகத்துள்ளும் பலர் தொழ
விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்(பெரும்பாண்: 403-411)

என்னும் பெரும்பாணாற்றுப்படையின் வாயிலாக அறியலாம்.

## கிடங்கில்

கிடங்கில் நல்லியக்கோடன் ஆட்சி செய்த ஒய்மாநாட்டின் தலைநகரமாக விளங்கியது. இன்றும் கிடங்கில், கிடங்கால் என்னும் பெயர்களில் அழைக்கப்படுகிறது இன்று இது திண்டிவனத்திற்கு அருகில் உள்ளது. 'கிடங்கு என்ற சொல் அகழி என்றும் பண்டகசாலை என்றும் பொருள்படுவதால் இந்த இரண்டில் ஒன்றின் அமைப்பால் பெயர் பெற்ற ஊராகக் கிடங்கில் அமைந்திருக்கலாம்' (ஆளவந்தார், ஆர்., இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், பக்:109)என்று ஆர் ஆளவந்தர் குறிப்பிடுகிறார்.

கிடங்கில் இனிமை பொருந்தியதாக விளங்கியது என்றும் கொத்துக் கொத்தாகப் பூக்கும் தோட்டங்களை உடையதாக விளங்கியது என்றும் கூறுவதை 'கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில்' (சிறுபாண்: 160) என்னும் பாடலடி காட்டுகின்றது. இந்நகரம் மிகவும் பழமையானதாகவும், இந்நகரத் தெருக்களில் உள்ள புழுதியை யானைகளின் மதநீர் அடக்கியதாகவும் திருவிழாக்களை உடையதாகவும் விளங்கியுள்ளதை பின்வரும் பாடலடிகள் வெளிப்படுத்தியுள்ளன.

'பிணன் உகைத்துச் சிவந்த பேர் உகிர்க் பணைத்தாள்
அண்ணல் யானை அருவிதுகள் அவிப்ப
நீறு அடங்கு தெருவின் அவன் சாறுஅயர் மூதூர் (சிறுபாண்: 199-201)

## துறைமுக நகரங்கள்

நெய்தல் நிலப்பகுதியில் ஆற்றுநீர் கடலோடு கலக்குமிடத்தே அமைந்த நகரங்கள் துறைமுகங்களாகத் தோற்றம் பெற்றன. ஒருசில இடங்களில் நகரங்கள் ஆற்றுமுகத் துவாரங்கள் இல்லாத கடல் துறைப்பக்கத்தே செயற்பட்டன. இத்துறைமுகங்களில் வணிகக் கப்பல்கள் வந்து ஏற்றுமதி, இறக்குமதி செய்தன. எனவே இங்கு வணிகமும் செல்வமும் செழிப்புற்று விளங்கின. அந்தவகையில் சங்க இலக்கியங்களில் குறிப்பாக பொருநராற்றுப்படை தவிர்ந்த ஏனைய ஆற்றுபடை இலக்கியங்களில் எயிற்பட்டினம், நீர்ப்பெற்று, என்னும் நகரங்கள் இடம்பெற்றுள்ளன.

## எயிற்பட்டினம்

எயிற்பட்டினம் ஒய்மா நாட்டின் துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. மதில் சூழ்ந்த பட்டினம் என்னும் பொருளில் மதிற்பட்டினம், எயிற்பட்டினம், சோப்பட்டினம் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டது. சிறுபாணாற்றுப்படையில் மதிலின் பெயர் எய்திய நகரம் எனக் குறிப்பிடுகிறார். இதை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் எயிற்பட்டினம் என உரை கூறியுள்ளார். இந்நகரம் உப்பங்கழிகளைச் சூழ்ந்த ஊர்களை உடையதாகவும், இங்குள்ள கடற்கரையில் தாழைகள் அன்னம் போல மலர்ந்துள்ளதாகவும், செருத்தி மலர் இளவேனில் காலத்தில் காண்போர் கண்களுக்கு பொன் போன்று காட்சியளித்துள்ளதோடு உப்பங்கழிகளுக்கு அருகில் பூத்த கழிமுள்ளிச் செடியின் மலர்கள் நீலமணிபோலக் காட்சியளிப்பதாகவும், புன்னை மரங்கள் முத்துக்களைப் போல மலர்களை உதிர்ப்பதாகவும் சிறுபாணாற்றுப்படை வெளிப்படுத்தியுள்ளது.

'அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழா அலவும்
கொடுங்காற் புன்னை நித்தலம் வைப்பவும்
கான் வெண்மணல் கடலுவாய் நிமிர்தரப்
பாடல்சான்ற நெய்தல் நெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர் படுவிற் பட்டினம்'(சிறுபா 146-159)

அத்தோடு சிறுபாணாற்றுப்படையில், எயிற்பட்டினத்தின் கடற்கரையில் வாசமான அகில் கட்டைகள் அலைகளால் கடற்கரையை வந்தடைவதாகவும், முடிச்சுள்ள அகிற் கட்டைகள் ஒட்டகம் படுத்துறங்குவதைப்போன்று காட்சியளிப்பதாகவும் இக்கட்டைகளை எரித்துக் களிப்புடைய தேறலைக் காய்ச்சி இங்கு வரும் விருந்தினர்களுக்குக் கொடுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

'னோங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரைக் கொணர்ந்த விரைமர விறகிற்...'(சிறுபா:154-159)

எயிற்பட்டினம் என்னும் நகரம் கடலில் மூழ்கி அழிந்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## நீர்ப்பெயற்று

நீர்ப்பெயற்று என்னும் துறைமுகம் தொண்டை நாட்டில் அமைந்திருந்தது. 'நீர்ப்பெயற்று என்பது நீர்ப்பாயல் துறை என்பதன் மரூஉ, இதனைக் 'கடல் மலைத் தலசயனம்' என்று வைணவர் வழங்குவர். மல்லை, மாமல்லை, மாவலிபுரம், மகாவலிர்ரம் என இப்பட்டினத்தின் பெயர் படிப்படியாய் மருவி இக்காலத்தில் மகாவலிபுரம் என வழங்குகிறது'(). என உரையாசிரியர்கள் கூறுகின்றனர். நீர்ப்பெயற்று என்பது கடல்நீர் உட்பெய்தலைக்கொண்டதாகிய நிலம் எனப் பொருள்படும். அதாவது எப்பங்கழிகளை உடைய நிலப்பகுதியாகும்.

நீர்ப்பெயற்று எனும் நகரத்தின் எல்லையில் துறைமுகம் அமைந்திருந்ததாகவும் இத்துறைமுகத்தில் பல கப்பல்கள் குழுமியிருந்ததாகவும் இங்கு மேல்திசை நாடுகளிலிருந்து வெண்மை நிறமுடைய குதிரைகள் கப்பல்களிலிருந்து இறக்குமதியானதாகவும் (இதனை வடதிசையின் புரவி என்றும் கூறுவர்), வட திசையிpருந்து பொன், மணிகள் போன்ற வளமுடைய பொருள்களையும் இறக்குமதி செய்யும் கலங்களும் இத்துறைமுகத்தில் இருந்ததாகவும் பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

'நீர்ப்பெயற் றெல்லை போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளவத் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை' (பெரும்:319-321)

இத்துறைமுகத்தை ஒட்டிய கடற்கரையின் உட்பகுதியில் நகரம் இருந்துள்ளதோடு, இந்நகரத்தில் பரதவர்கள், வணிகர்கள் வாழ்ந்துள்ளனர். மேலும் இத்துறைமுகத்தின் அருகில் விண்ணைத் தொடும் அளவிற்கு கலங்கரை விளக்கம் அமைந்துள்ளதாகவும் இத்துறைமுகத்தில் மகளிர்கள் நீராடுவதாகவும் காணப்பட்டுள்ள நீர்ப்பெயற்று என்னும் துறைமுகம் இன்று மகாவலிபுரம் என்ற பெயரால் தமிழகத்தில் அழைக்கப்படுகின்றது.

# தொகுப்புரை

பொதுவாக சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நகரங்கள் ஆற்றங்கரையோரங்களிலும், மருதநிலப்ப பகுதிகளில் அமைந்துள்ளன. இங்கு வாழ்துள்ள மக்கள் வேளாண்மை மற்றும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்தோடு நாட்டின் நிர்வாக மையமாக தலைநகரங்கள் விளங்கியுள்ளதோடு இவை பாதுகாப்பு வசதிகளுடன் அமைந்துள்ளன. துறைமுக நகரங்கள் கடல் போக்குவரத்து மற்றும் வணிக நடவடிக்கைகளுக்குரிய முக்கியமான இடமாக அமைந்துள்ளன. பழந்தமிழ் நகரமைப்பு கலைகளில் சிறந்து விளங்கியுள்ளதை காஞ்சி நகரத்தின் வாயிலாக அறியலாம். சங்ககாலத்தில் பெரிய நகரங்களாக விளங்கியவை தற்பொழுது சிற்றூர்களாகவும், சில நகரங்கள் அழிவடைந்தும் சில நகரங்கள் திரிபடைந்தும் காணப்பட்டுள்ளதை கீழடி ஆய்வுகள்மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

# உசாத்துணை நூல்கள்


1. ஆளவந்தார், ஆர்., 1998, இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்,சென்னை.
2. இராசமாணிக்கனார், மா., 1980, சங்க இலக்கிய வரலாறு, சென்னை.
3. இராசமாணிக்கனார், 1970, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, குணா பில்டிங், சென்னை.
4. சாமிநாதையர்,உ,வே., 1986, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்(தொகு), தமிழ்ப்பல்கலைக்கழக மருதோன்றி அச்சகம், சென்னை.
5. சாமி சிதம்பரானார், 2008, பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை, சென்னை.
6. திருமுருகாற்றுப்படை, 1955, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு, அப்பர் அச்சகம், சென்னை.
7. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, 1948, திருமகள் அச்சகம், சென்னை.


# கட்டுரைகள்


கணியன் பாலன், (2019), (2019) கணியன் பாலன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சங்ககாலமும் நகர அரசுகளும், உலகத் தமிழ் பண்பாட்டு மையம், சென்னை.